# திருநெல்வேலி மாநகராட்சி

## 11.04.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

1) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலைய புதியதாக கட்டப்பட்ட 30 கடைகளில் ஏலம் விடப்பட்ட கடைகள் தவிர மீதமுள்ள தரைதளத்தில் 9 கடைகளும் முதல் தளத்தில் உணவகம் (Restaurant) உட்பட 16 கடைகளும் சேர்ந்து ஆக மொத்தம் 25 வணிக கட்டிடங்களுக்கு 02.03.2022 மற்றும் 23.3.2022 ஆகிய இரண்டு நாட்களில் மறுஏலம்/ஒப்பந்தபுள்ளி நடைபெற்றதில் கடை எண்.G10கடை எண்.G31 மற்றும் கடை எண்.G4 ஆகிய மூன்று கடைகளுக்கு கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை.

| கடை எண் | ஏலதாரரின் பெயர் மற்றும் முகவரி | வைப்புத்தொகை செலுத்திய விபரம் | கூடுதல் வைப்புத்தொகை அல்லது சால்வன்சி விபரம் | உச்ச ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| G10 | திரு. S.M.கென்னடி<br>த/பெ சொக்கலிங்கம்<br>4C டேனியல் தாமஸ் தெரு<br>பாளையங்கோட்டை<br>திருநெல்வேலி 627002 | கரூர் வைஸ்சியா வங்கி வரைவோலை எண் 845126 & 845127<br>நாள் 02.03.2022<br>தொகை<br>(ரூ.5,00,000/-& ரூ.5,00,000/-)<br>ரூ.10,00,000/- | சால்வன்சி மதிப்பு தொகை<br>ரூ.32,00,000/-<br>சான்றிதழ் எண் TN-1720211120102<br>நாள் 24.11.2021 | ரூ.10100/- |
| G31 | திரு. R.ஜெபக்குமார்<br>த/பெ.ராஜாபாண்டியன்<br>288 அத்திபூவனத் தெரு<br>திருமால் நகர்<br>பாளையங்கோட்டை.<br>திருநெல்வேலி -627002 | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வரைவோலை எண் 603746<br>நாள் 02.03.2022<br>தொகை<br>ரூ.10,00,000/- | சால்வன்சி மதிப்பு தொகை<br>ரூ.20,00,000/-<br>சான்றிதழ் எண் TN-1720211026119<br>நாள் 06.12.2021 | ரூ.18500/- |
| G4 | திரு. V. குமரேசன்<br>த.பெ P. வீரபாண்டியன்<br>6/146 முருகன் கோவில் தெரு<br>ஆவரைக்குளம் | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வரைவோலை எண்<br>377028&377029<br>நாள் 19.03.2022<br>தொகை<br>(ரூ.5,00,000/- &ரூ.5,00,000/-)<br>ரூ.10,00,000/- | சால்வன்சி மதிப்பு தொகை<br>ரூ.25,00,000/-<br>சான்றிதழ் எண் TN-1720220315121<br>நாள் 17.03.2022 | ரூ.20200/- |

மேற்கண்டவாறு இதில் தரைதளக் கடை எண் G10-க்கு திரு.S.M.கென்னடி என்பவர் ஏலநிபந்தனைகளின்படி வைப்புத்தொகை ரூ.10,00,000/-க்கான வங்கி வரைவோலை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைக்கு பதிலாக சால்வன்சி மதிப்பு தொகை ரூ.32,00,000-க்கு சமர்பித்து ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்விக் கேட்டுள்ளார்.

அன்னாரின் ஏலக்கேள்வித் தொகையானது குறுமத்தொகை ரூபாய் 10,000/- யைவிட ரூ.100/- கூடுதலாக கேட்டுள்ளதால் அன்னாரின் உச்ச ஏலகேள்வித்தொகை ரூ.10100/- மற்றும் கடை எண் G31-க்கு திரு. R.ஜெபக்குமார் என்பவர் ஏலநிபந்தனைகளின்படி வைப்புத்தொகை ரூ.10,00,000/-க்கான வங்கி வரைவோலை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைக்கு பதிலாக சால்வன்சி மதிப்பு தொகை ரூ.20,00,000/-க்கு சமர்பித்து ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்டுள்ளார். அன்னாரின் ஏலக்கேள்வித் தொகையானது குறுமத்தொகை ரூபாய் 18,000/- யைவிட ரூ..500/- கூடுதலாக கேட்டுள்ளதால் அன்னாரின் உச்ச ஏலகேள்வித்தொகை ரூ.18500/-ஐ மற்றும் கடை எண் G.4-க்கு திரு.V.குமரேசன் என்பவர் ஏலநிபந்தனைகளின்படி வைப்புத்தொகை ரூ.10,00,000/-க்கான வங்கி வரைவோலை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைக்கு பதிலாக சால்வன்சி மதிப்பு தொகை ரூ.25,00,000/-க்கு சமர்பித்து ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்டுள்ளார். அன்னாரின் ஏலக்கேள்வித் தொகையானது குறுமத்தொகை ரூபாய் 20,000/- யைவிட ரூ..200/- கூடுதலாக கேட்டுள்ளதால் அன்னாரின் உச்ச ஏலகேள்வித்தொகை ரூ.20,200/-ஐ ஏற்று மேற்கண்டவாறு தரைதளக் கடை எண். G10, கடை எண். G31 மற்றும் கடை எண்.G.4 ஆகிய மூன்று கடைகளுக்கும் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டிற்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பொருளில் கண்டவாறு மூன்று தரைதள கடைகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட கூடுதலாக ஏலக்கேள்வி கேட்டுள்ளதால் மாநகராட்சியின் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு உச்ச ஏலக் கேள்வித் தொகையினை அங்கீகரித்து மூன்று கடைகளையும் மாத வாடகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/3990/2021 (பா.ம)

## தீர்மானம் எண்: 8 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

2) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட 4 உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி 2022ஆம் ஆண்டு முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (Lease)த் திற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டின் உரிமத்தொகையில் 5 சதவிகிதம் உயர்வுடன் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு 25.03.2022 அன்று பொது ஏலம்/ ஒப்பந்துபுள்ளி கோரப்பட்டது. அதனடிப்படையில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 10.03.2022அன்று 2 தமிழ் நாளிதழில் வெளியிடப்பட்டது மேலும் மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கும் வைக்கப்பட்டது.

இனம் எண். 1 மேலப்பாளையம் மண்டலம் பகுதிகளில் மாடுகள் அறுக்கும் இடத்தில் அல்லது மாநகராட்சி நிர்ணயிக்கும் இடத்தில் அறுக்கப்படும் மாடுகளுக்கு இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கபப்ட்ட கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 25-03-2022 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விபரம் கிழ்கண்டவாறு உள்ளது.

ஏலம் விபரம் (குறுமத்தொகை ரூ.8,55,000/-)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஆசியா பீவி, 168/254, பெரிய கொத்பா பள்ளிவாசல் தெற்கு கீழத்தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ2.00 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2.00 இலட்சம் சேர்த்து ரூ.4.00 இலட்சத்துக்கான பாங்க் ஆப் பரோடா வங்கி வரைவோலை எண் 583497, நாள்: 24.03.2022 | ரூ.8,66,000/- |

ஒப்பந்தப்புள்ளி விபரம்

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்படி ஏலத்தில் திருமதி.ஆசியாபீவி என்பவர் ரூ.8,66,000/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகையை விட ரூ.11,000/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திருமதி.ஆசியாபீவி என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.8,66,000/-ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

<u>இனம் எண். 3</u> மேலப்பாளையம் மண்டலம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜீ.ஆர் பேரூந்து நிலையத்தில் உள்ள பொருட்காப்பறையில் பயணிகளிடம் இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கபப்ட்ட கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 25-03-2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி விபரம் கிழ்கண்டவாறு உள்ளது.

ஏலம் விபரம் (குறுமத்தொகை ரூ.1,00,000/-)

ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை

ஒப்பந்தப்புள்ளி விபரம்

ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.N.சுப்பையா 75,பாலாஜி அவென்யூ தச்சநல்லூார். | வைப்புத்தொகை ரூ40,000/- மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.40,000/- சேர்த்து முறையே ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி வரைவோலை எண்:601937 மற்றும் 601938, நாள்: 24.03.2022 | ரூ.2,26,300/- |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.N.சுப்பையா என்பவர் ரூ.2,26,300/- என ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1,26,300/- கூடுதலாக உள்ளது.

எனவே திரு.N.சுப்பையா என்பவருக்கு அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.2,26,300/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

<u>இனம் எண்.4</u> மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலையோரம் அமர்ந்து காய்கறிகள் விற்பனை செய்பவர்களிடம் மற்றும் ஆடு, மாடு, கோழி இறைச்சி விற்பனை கடை உரிமையாளர்களிடமும் இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கபப்ட்ட கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 25-03-2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விபரம் கிழ்கண்டவாறு உள்ளது.

ஏலம் விபரம் (குறுமத்தொகை ரூ.1,50,000/-)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.சாலி மௌலானா<br>86, செல்வகாதர் தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.50,000/ மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.50,000க்கு தனித்தனியே முறையே HDFC வங்கி வரைவோலை எண்:000065 மற்றும் 000066,<br>நாள்: 24.03.2022 | ரூ.1,55,000/- |

ஒப்பந்தப்புள்ளி விபரம்

ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி ஏலத்தில் திரு.சாலிமௌலானா என்பவர் ரூ.1,55,000/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையை விட ரூ.5,000/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.சாலிமௌலானா என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.1,55,000/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

அலுவலக குறிப்பு :

பொருளில் காணும் விபரப்படி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட 4 உரிமஇனங்களுக்கு 25.03.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் உரிம இனம்- 1, 3 மற்றும் 4, க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிலையில்

<u>உரிமஇனம்-1</u> ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திருமதி.ஆசியாபீவி என்பவர் ரூ.8,66,000/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.11,000/- கூடுதலாக கேட்டுள்ளதால் திருமதி.ஆசியாபீவி என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.8,66,000/- ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>உரிமஇனம்-3</u> ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.என்.சுப்பையா என்பவர் ரூ.2,26,300/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.1,26,300/- கூடுதலாக கேட்டுள்ளதால் திரு.என்.சுப்பையா என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.2,26,300/- ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

உரிமஇனம்-4 ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு.சாலிமௌலானா என்பவர் ரூ.1,55,,000/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.5000/- கூடுதலாக கேட்டுள்ளதால் திரு.சாலிமௌலானா என்பவரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.5,000/- ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: மே.பா.அ1/655/2022)

## தீர்மானம் எண்: 9 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

3) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜீ.ஆர் பேரூந்து நிலையத்தில் தற்போது சீர்மிகு நகரத்திட்டம் (Smart City Scheme)-ன் கீழ் புதிதாக பல் அடுக்கு வாகன காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு கூடுதலாக முன்னாள் இராணுவனத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 3 பாதுகாவலர்களினை பணியமர்த்தி கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாகன காப்பகத்தின் கட்டணம் வசூல் செய்யும் பணியின் முக்கியதுவம் கருதி முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 10.02.2022அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர் 3 நபர்களினையும் 09.02.2023 முடிய பணியாற்ற அனுமதித்தும், மாத ஊதியமாக ரு.19239/- மற்றும் 12% சேவைக்கட்டணம் 18% சேவை வரி எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 3 பாதுகாவலர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

அலுவலக குறிப்பு :

பொருளில் காணும் விபரப்படி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜீ.ஆர் பேரூந்து பேரூந்து நிலையத்தில் தற்போது சீர்மிகு நகரத்திட்டம் (Smart City Scheme)-ன் கீழ் புதிதாக பல் அடுக்கு வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு முன்னாள் இராணுவனத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பாதுகாவலர்களை 10.02.2022 முதல் 09.02.2023 வரையிலான காலத்திற்கு பணியாற்றவும், அவர்களுக்கான மாத ஊதியமாக ரூ.19,239/- மற்றும் 12% சேவைக்கட்டணம் 18% சேவை வரி எனும் அடிப்படையில் அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் ஆகிய கூடுதல் செலவினங்களுக்கும் அப்பணியின் அத்தியாவசிய அவசரம் கருதி 10.02.2022 முதல் 3 பாதுகாவலர்கள் (TEXCO) பணிபுரிய மாமன்றம் அனுமதிக்கலாம்

(அ1-6660-2021 மே.பா.)

## தீர்மானம் எண்: 10 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண் 17, Oasis Matriculation Higher Secondary School, Next to KTC Nagar, Palayamkottai, Tirunelveli - 627002-க்கு சொந்தமான கட்டிடத்தின் சொத்து வரிவிதிப்பு எண்.146/278235-க்கு 2010-2011 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டு 2010-2011 முதல் 2017-2018 முடிய வரித்தொகை ரூ.12,18,192/- செலுத்த இவ்வலுவலகத்தின் மூலம்

அறிவிப்பு அனுப்பப்பட்டதில் சம்பந்தப்பட்ட பள்ளி தாளாரால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.10015 of 2018 and WMP (MD) No.9154 of 2018-இல் 27.04.2018-இல் மேற்படி சொத்துவரித் தொகை ரூ.12,18,192/-ஐ வசூலிப்பதில் இடைக்கால தடையாணை அளித்து தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புரை தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக்கருத்துரை பெறப்பட்டு சட்டக்கருத்துரையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.7234/2014/RI, நாள் 25.05.2018 கல்வி கட்டடத்திற்கு 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் வரிவிதிப்பு செய்யப்படவேண்டும் என சட்டக்கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்ற வழக்கறிஞர் அவர்களின் சட்டக்கருத்துரையின் அடிப்படையில் மேற்படி தனியார் பள்ளி கட்டிடத்திற்கு 2021-2022 ஆண்டு முடிய ரூ.18,27,288/- நிலுவையாக உள்ளதில் தற்போது ரூ.11,42,055/-ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்து மீதமுள்ள தொகை ரூபாய் 685233/-ஐ வசூல் செய்து உரிய சொத்துவரி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படிவிபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

Oasis Matriculation – பள்ளியின், சொத்து வரிவிதிப்பு எண் 146/278235-க்கு 2010-2011/I அரையாண்டு முதல் 2017-2018/I அரையாண்டு முடிய வரித் தொகை ரூ.11,42,055/-ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்து மீதமுள்ள தொகை ரூ.685233/-ஐ வரவு வைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விபரத்தினை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

## தீர்மானம் எண்: 11 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

5) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலைய கடைகளை இடித்து சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் நிலையில் பழைய கடை குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தூய யோவான் கல்லூரி ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளில் மீதமுள்ள 6 கடைகளை வேளாண்மை துறைக்கு வழங்க கோரி கடிதம் வரபெற்றதின் அடிப்படையில் 6 கடைகளை வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படிகடைகளை மாவட்டஆட்சித் தலைவர் அவர்களால் 21.01.2022 அன்று திறந்து வைக்கப்பட்டதின் அடிப்படையில் கடை ஒன்றுக்கு மாதவாடகையாக ரூ.850/-வீதம் நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:-**

பொருளில் கண்டவாறு வேளாண்மைதுறை மூலம் இயற்கை வழி விளைபொருட்கள் விற்பனை செய்யும் பொருட்டு 6 தற்காலிக கடைகளுக்கு மாத வாடகையாக கடை ஒன்றுக்கு ரூ.850/-வீதம் கடை வாடகை நிர்ணயம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.அ1/443/2022-பாளை)

## தீர்மானம் எண்: 12 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 25-ல் அலுவலக வளாகத்தின் (நகரளவு வார்டு எண் BL, பிளாக் எண் 12, நகரளவு சர்வே எண்: 1156/2 & 1156/3) தென்கிழக்கு பகுதியில் Guest House கட்டிடம் கட்ட, மேலாண்மை இயக்குநர், திருநெல்வேலி "சீர்மிகு நகரம்" திட்டம், திருநெல்வேலி மாநகராட்சி, அவர்களின் வேலை ஆணை எண் 5/2021-22/SCM, நாள் 31.12.2021-யின் படி M/s. G.V. Construction நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணி நடைபெறும் இடத்தில் தென்கிழக்கு பகுதியில் கீழ்கண்ட பழைய பழுதடைந்த பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடங்கள் அமைந்துள்ளது.

- பின் பகுதியில் அமைந்துள்ள பழைய மார்ச்சுரி கட்டிடம் - 17.00மீ x 2.00மீ
- பின் பகுதியில் அமைந்துள்ள பழைய குடோன் கட்டிடம் - 10.23மீ x 4.00மீ
- முன் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிட கட்டிடம் - 12.00மீ x 3.00மீ
- முன் பகுதியில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிட கட்டிடம் - 6.00மீ x 4.00மீ
- முன் பகுதியில் அமைந்துள்ள பழைய அங்கன்வாடி கட்டிடம் - 12.00மீ x 7.00மீ

மேற்கண்ட கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். தற்போது மேற்படி கட்டிடங்கள் யாதொரு பயன்பாடும் இல்லாமல் பழுதடைந்த நிலையில் கீழே விழும் நிலையில் உள்ளது. மேலும் மேற்படி பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் GUEST HOUSE கட்டிடம் அமைக்க மேற்கண்ட வேலை ஆணையின் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பழைய பயன்படுத்த இயலாத கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் 25-ல் அலுவலக வளாகத்தின் தென்கிழக்கு பகுதியில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக Guest House கட்டிடம் கட்ட, "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் வேலை ஆணை எண் 5/2021-22/SCM, நாள் 31.12.2021-யின் படி M/s G.V.Construction நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணி நடைபெறும் இடத்தில் பழைய பழுடைந்த பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டிடங்களான மேற்கண்ட 5 கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஒ.பு.எண் 05/2021-22/SCM)(பாளை)

**தீர்மானம் எண்: 13 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

7) திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 108.65 சதுர கிலோமீட்டர் ஆகும். 2011ம் ஆண்டின் கணக்கெடுப்புபடி இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 473637. தற்போதைய உத்தேச மக்கள் தொகை 522322 ஆகும். இம்மாநகராட்சியில் தற்போது நாள் ஒன்றுக்கு உத்தேசமாக 170 மெ.டன் குப்பை உருவாகின்றது. இதில் மக்கும் குப்பை 102 மெட்ரிக் டன் ஆகவும் மக்காத குப்பை 68 மெட்ரிக் டன் ஆகவும் உள்ளது.

102 மெட்ரிக் டன் மக்கும் குப்பையின் அளவு கீழ்க்கண்டவாறு:

| | | | |
|---|---|---|---|
| Bio-Methanation Plant – Melapalayam | : | 5.00 | மெ.டன். |
| Bulk waste Generators | : | 22.00 | மெ.டன். |
| 40 நுண் உர மையங்களில் இருந்து உரமாக்கப்படும் அளவு | : | 35.00 | மெ.டன். |
| சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 6 நுண் உர மையங்களில் இருந்து உரமாக்கப்படும் அளவு | : | 40.00 | மெ.டன். |

இவற்றில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் உள்ள 6 நுண் உர மையங்களில் ஒன்றான இராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தினுள் உள்ள நுண் உர மையத்தில் மக்கும் குப்பையில் இருந்து 20 மெ.டன் அளவு நுண் உர மையம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இந்நிலையில், மேற்படி இராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள 20 மெ.டன் அளவு நுண் உர செயலாக்க மையத்தில் இருந்து மக்கும் குப்பையில் இருந்து நாள் ஒன்றுக்கு 20 மெ.டன் அளவு உரத்தை தமது நிறுவனம் மூலமே Public Private Partnership (PPP) முறையில் தயார் செய்ய M/s.MAK India Limited, Coimbatore நிறுவனம் முன்வந்துள்ளது. எனவே, அந்நிறுவனம் சமர்ப்பித்துள்ள இணைப்பில் காணும் நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்வதற்கு குழு ஒன்று அமைத்து அக்குழுவின் பரிந்துரையுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி நிபந்தனைகளுக்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்வதற்கும் மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள நிபந்தனைகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், இராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தினுள் உள்ள நுண் உர செயலாக்க மையத்தில் மக்கும் குப்பையில் இருந்து நாள் ஒன்றுக்கு 20 மெ.டன் அளவு உரத்தை M/s.MAK India Limited, Coimbatore நிறுவனம் Public Private Partnership (PPP) முறையில் மேற்படி பணியினை செய்வதற்கு முன்வந்துள்ளபடியால், இணைப்பில் காணும் மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்வதற்கு குழு ஒன்று அமைத்து மேற்படி குழுவின் பரிந்துரையுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி உரிய ஒப்புதல் பெற்ற பின்னர், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நிறுவனத்தினை தேர்வு செய்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ3.1481 /2022)

**தீர்மானம் எண்: 14 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

8) தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15 ஆவது மத்திய நிதி ஆணையம் 2022-2023ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும்

எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.7.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.11.2019ன்படி சொத்துவரி சீராய்வானது நிறுத்திவைக்கப்பட்டு சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும் இக்குழுவானது சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாமலும், உள்ளாட்சி அமைப்புகளில் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வு இல்லாமலும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது மாநகரங்கள் மற்றும் நகரங்களில் நிர்வாகச்செலவினம், பொருளதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும் மாநகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மானியம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும், தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கீழ்க்கண்டவாறுசொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்யவும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

1) சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022.2023 முதலாம் அரையாண்டு (1-4-2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யவும்.

2) மாநகராட்சிப்பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகளின் அடிப்படையில் சொத்துவரி சீராய்வு செய்யவும்.

3) சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022ன்படி கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பீடு நிர்ணயம் செய்யவும்

சொத்துவரி

| வ. எண் | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு ரூ.பை | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி/உபயோகம் | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு |
| 1 | A | | குடியிருப்பு | | ரூ. பை |
| | | | < = 600 | 1.25 | 1.45 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1.15 | 601 -1200 | 1.5 | 1.75 |
| | | | 1201-1800 | 1.75 | 2.00 |
| | | | >1801 | 2 | 2.30 |
| | | 2.30 | தொழிற்சாலை | 1.75 | 4.00 |
| | | 3.45 | வணிகம் | 2 | 6.90 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 6.00 |
| 2 | B | 0.60 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 0.75 |
| | | | 601 -1200 | 1.5 | 0.90 |
| | | | 1201-1800 | 1.75 | 1.05 |
| | | | >1801 | 2 | 1.20 |
| | | 1.20 | தொழிற்சாலை | 1.75 | 2.10 |
| | | 1.80 | வணிகம் | 2 | 3.60 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 3.60 |
| 3 | C | 0.50 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 0.65 |
| | | | 601 -1200 | 1.5 | 0.75 |
| | | | 1201-1800 | 1.75 | 0.90 |
| | | | >1801 | 2 | 1.00 |
| | | 1.00 | தொழிற்சாலை | 1.75 | 1.75 |
| | | 1.50 | வணிகம் | 2 | 3.00 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 2.65 |

மேலும் குளிரூட்டப்பட்ட கல்யாண மண்டபங்கள், அதிநவீன மருத்துவமனைகள் விடுதிகளுடன் கூடிய நட்சத்திர உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் திரையரங்குடன் கூடிய வணிக வளாகங்கள், தீம் பார்க் போன்ற சிறப்பு கட்டிடங்களுக்கு (Special Buildings) கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயிக்கவும் குழு பரிந்துரைக்கிறது"

| மண்டலம் | தற்போது நிர்ணயிக்கப்படும் அடிப்படை மதிப்பு ரூ. |
|---|---|
| A | 11.00 |
| B | 7.50 |
| C | 4.00 |

4) மேலும், மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்பந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிக நிறுவனங்களுக்கு /வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும். .
6) தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்து வரி உயர்வு செய்யப்படவேண்டும்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிகிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படவேண்டும். மேலும் சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்படவேண்டும்.

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்படவேண்டும்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

5) மேலும் திருநெல்வேலி மாநகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின் கட்டணம் | 0.74 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை விபரம் | 4.91 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 344.73 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேுண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியம் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத்தொகை) | 4.79 |
| | மொத்தம் | 355.17 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மெற்றும் மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் மாநகராட்சி செலுத்தவேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும் மேற்கண்ட

அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 அத்தியாயம் 5 பிரிவு 118 ல் (பிற மாநகராட்சிகளுக்கு) குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும் திருநெல்வேலி மாநகராட்சியில்,

1) 600 சதுரடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யவும்

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யவும்,

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யவும்,

4) 1800 சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யவும்.

5) வணிக நிறுவனங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யவும்

6) தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்து வரி உயர்வு செய்யவும்,

7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிகிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யவும்,

6) மேலும் ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில் ஆண்டு தோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் தன்னிச்சையாகவே, சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யவும்,

7) திருநெல்வேலி மாநகராட்சியில் கடந்த 01.04.2008 பொது சொத்துவரி திருத்ததத்தின்போது மாநகராட்சியின் பகுதிகளைன A,B,C,D - என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு “A” குறைவான அடிப்படை மதிப்பு உடைய மண்டலமாகவும், B அதற்கு அடுத்த உயர்நிலையிலும், C அதற்கு அடுத்த உயர்நிலையிலும், D என்பது வணிக நிறுவனங்கள் போக்குவரத்து நிறைந்த உயர்நிலை மண்டலமாகவும் அமைக்கப்பட்டது. ஆனால் இதர மாநகராட்சி, நகராட்சிகளில் A உயர்நிலை மண்டலமாகவும், B C D ஆகிய அதற்கு அடுத்தத்த குறைந்த மதிப்பிலான மண்டலங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் போன்று திருநெல்வேலி மாநகராட்சியிலும், A உயர்நிலை மண்டலமாகவும், B மற்றும் C ஆகிய மண்டலங்களை அதற்கு அடுத்தடுத்த குறைந்த மதிப்பிலான மண்டலங்களாகவும் மாற்றி அமைக்கவும்

8) மேலும் தற்போதுள்ள A B C D மண்டலங்களில் அமைந்துள்ள பகுதிகளை அப்பகுதிகளில் கடந்த 13 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்து பயன்பாடு அடிப்படை வசதிகளில் மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I ல் கண்ட பகுதிகளை அப்பட்டியலில் கண்டவாறு A B C என்ற மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தவும்,

9) மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல்

விடுபட்டுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு II ல் கண்ட சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு அப்பட்டியலில் கண்ட விபரப்படி மண்டலங்கள் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சியில் கடந்த 01.04.2008இல் பொது சொத்துவரி திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 13 ஆண்டுகள் கழித்து 01-04-2022 முதல் தற்போது பொது சொத்துவரி திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த 13 ஆண்டுகளீல் பொதுமக்களின் அடிப்படை தேவைகளான சாலைகள் தெரு விளக்குகள் குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடை வசதி, சுகாதார பணிகள் போன்றவை செய்து கொடுக்கும் வகைக்கும் பராமரிக்கும் வகைக்கும் ஆகும் செலவு பல மடங்கு உயர்ந்துள்ளன. மேலும் விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு மின் கட்டணமும் கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு உள்ளாட்சி பங்குத்தொகையாக ரூ.25 கோடி செலவிட வேண்டியுள்ளது. மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் நகராட்சி செலுத்தவேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு ரூ.355.17 கோடி நிலுவைத்தொகை செலுத்த வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளவும், அடிப்படை வசதிகள் மேம்படுத்தவும் மாநகராட்சியில் தற்போதைய நிதி நிலைமை போதுமானதாக இல்லை. மாநகராட்சியின் வருவாயில் பிரதானமானது சொத்துவரி மூலம் கிட்டும் வருவாயே ஆகும். இவற்றை கருத்தில் கொண்டும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.53 நாள்.30.03.2022ன்படி, மேலே பொருளில் காணும் விபரப்படி வரிசை எண் 1 முதல் 9 வரையிலான பொருள்கள் குறித்து மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
(அ1/1451/2022)

## தீர்மானம் எண்: 15 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

9) சொத்துவரி பொது சீராய்வு 01-04-2022 முதல் அமுல்படுத்த தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள்.30-03-2022 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண் அ1/1451/2022)

## தீர்மானம் எண்: 16 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

10) அரசாணை எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள்.30-03-2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.1-4-2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படி 01-04-2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்வதற்கு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொள்ளும் வகைக்காக ஏற்படும் செலவினம் மற்றும் சுயமதிப்பீட்டு படிவங்கள் அச்சிடுதல் மற்றும் பதிவேடுகள் ஆகிய செலவினங்களுக்காக உத்தேச செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு (ரூ.இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ1/1451/2022 மை.அ)

## தீர்மானம் எண்: 17 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.